செய்தி வெளியீடு நாள் : 22.05.2025

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் பல்வேறு புதிய திட்டப் பணிகளை மேம்படுத்தும் விதமாக காஞ்சிபுரம் மாவட்டம், கோவூர் கோயில் குளத்தையும், ஐயப்பந்தாங்கல் பேருந்து நிலையத்தையும் மற்றும் ஆதம்பாக்கம், பாலகிருஷ்ணா தெருவில் புதிய பல்நோக்கு மையம் அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர்கள் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் மற்றும் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (22.05.2025) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் பல்வேறு புதிய திட்டப் பணிகளை மேம்படுத்தும் விதமாக காஞ்சிபுரம் மாவட்டம், கோவூரில் உள்ள 1.42 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோயில் குளத்தை மேம்படுத்துவதற்காக ரூ.4.98 கோடி மதிப்பீட்டிலும், ஐயப்பந்தாங்கல் பேருந்து நிலையத்தை மேம்படுத்துவதற்காக ரூ.18.93 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சென்னை, ஆதம்பாக்கம், பாலகிருஷ்ணா தெருவில் புதிய பல்நோக்கு மையம் அமைப்பதற்காக ரூ.9.91 கோடி மதிப்பீட்டிலும் பல்வேறு புதிய பணிகளுக்கான பூமி பூஜையை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் **திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள்** மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி.கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., ஸ்ரீபெரும்புத்தூர் சார் ஆட்சியர் திருமதி.மிருணாளினி, இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் திரு.படப்பை மனோகரன், சி.எம்.டி.ஏ தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் திரு.மா.பாலமுருகன், குன்றத்தூர் வடக்கு பகுதி ஒன்றிய செயலாளர் திரு.வந்தே மாதரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் திரு.அன்பழகன், கோவூர் ஊராட்சி மன்ற தலைவர் திரு.சுதாகர், துணைத் தலைவர் திருமதி.ஜமுனா ராணி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி.பூங்கொடி ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate ™